DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.14**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | நாகவள்ளி |
| Husband Name | : | கணேசன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

( 1, 2 மற்றும் 7எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 9, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 8வது எதிரி ஆஜர் இல்லை. 8வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது சிந்தாமணி ரோட்டில் வசித்து வருகிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் சிந்தாமணி ரோட்டில் இரயில்வே கேட் அருகில் குடியிருந்து வருகிறேன் என்றும், என் வீட்டின் அருகே மணிகண்டன் என்பவர் டீ கடை வைத்து நடத்தி வருகிறார் என்றும், கடந்த 31.01.2013ம் தேதி இரவு 08.15 மணியை போல் நானும், எங்கள் வீட்டின் அருகே குடியிருக்கும் நாகரத்தினம் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது சந்தனமும், மற்றொரு நபரும் சிவப்பு கலர் மோட்டார் சைக்கிளில் வந்து **அ.சா.13**

பாக்கியம் கடை அருகே நிறுத்தி இறங்கினார்கள் என்றும், சந்தனத்திற்கு இடது கையில் காயம் ஏற்பட்டு இரத்தம் சொட்ட சொட்ட இறங்கி வந்தார் என்றும், **அ.சா.13** கடை முன்பு கை கழுவு எப்பவும் பக்கெட்டில் தண்ணீர் வைத்திருப்பார் என்றும், அதில் சந்தனம் இரத்தத்தை கழுவினார் என்றும், பின்பு இரண்டு பேரும் சந்து வழியாக கிழக்கு பக்கமாக அனுப்பானடி கண்மாய்க்கு செல்லும் வாய்க்கால் பக்கமாக போய்விட்டு சிறிது நேரத்தில் திரும்பி வந்து அவர்களின் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்விட்டதாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.17 15:23:10 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.